# தொண்டன்

ஆரம்பம் : பெப்ரவரி ~ 1969



நவம்பர் - 1999 ~ 12/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உங்கள் பக்கம்

## பயனுள்ள விடயங்கள்

புதிய உலகம் ஆயிரமாவது மலர் வெள்ளி விழா ஆண்டாக இடம் பெற்ற கருத்தோவியம் மிகவும் பயனுள்ள பல விடயங்களைத் தந்துள்ளது. அதற்குப் பெருமை தேடும் வகையில் தொண்டனின் அட்டையும் அமைந்திருந்தது.

*அ. ஸ்ரெலா பாரதி*
*மட்டக்களப்பு*

## பாராட்டுகிறோம்

முன்னாள் யாழ் மறை மாவட்ட ஆயரான கலாநிதி வ. தியோகுப்பிள்ளை அவர்களை கௌரவித்து தொண்டன் அட்டை அவரது படத்தை தாங்கி வந்தது பாராட்டுக்குரியது.

*பிலிப் மகேந்திரன*
*யாழ்ப்பாணம்*

## ஆச்சரியம்!

ஒக்டோபர் தொண்டனில் இடம் பெற்ற அருட்சகோதரி கிளேயர் அவர்களுடனான பேட்டிசுவையாக இருக்கிறது. அருட்சகோதரி ஒருவர் வீதி நாடகத்துறையில் ஈடுபட்டிருப்பது ஆச்சரியந்தான்!

*மேரி மாக்கிறட் பெர்னான்டோ*
*கொழும்பு – 13*

## பிறப்பு - அழகு

செப்டம்பர் மாதம் வெளிவந்த தொண்டனில் இடம் பெற்ற புதிய உலகம் – ஆயிரமாம் மலர் நிறைவு பற்றிய கட்டுரை சிறப்பாக இருந்தது. இலங்கை வானொலியில் கத்தோலிக்க நிகழ்ச்சிகளின் வரலாற்றை அழகாக வரைந்து ள்ளீர்கள். இத்துறையில் ஈடுபடுபவர்களுக்குத் தேவையான தகவல்கள் நிறையவுண்டு.

*அக்னஸ் ஞானமுத்து*
*திருகோணமலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

நவம்பர் - 1999

மலர் 31 — இதழ் 10

ஆசிரியர்:
A. தேவதாசன்

இணை ஆசிரியர்:
மலர்வேந்தன்

துணை ஆசிரியர்கள்:
S. A. இருதயநாதன்
மெற்றில்டா இராஜேந்திரம்


வெளியீடு:
சமூகத் தொடர்பு நிலையம்,
திரு/மட். மறை மாவட்டம்.

முகவரி:
சமூகத் தொடர்பு நிலையம்,
அ. பெ. எண் - 44,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44,
BATTICALOA. 30000
Tel: 065-22723

விலை: 12/-

ஆண்டுச் சந்தா: 140/-
(தபாற்செலவு உட்பட)



உள்ளே.........

1. இதயந்திறந்து ... 02
2. என் அன்னை ... 03
3. அழிந்தவர் ... 04
4. இவன் ஒரு ... 05
5. பரந்த மனம் ... 08
6. புனித நாட்டுப் பயணம் ... 09
7. வீதி நாடகப்பயிற்சி ... 11
8. கலை இலக்கிய மஞ்சரி ... 13
9. சிறு கிறிஸ்தவ ... 14
10. தேர்தல் வியாபாரம் ... 16
11. மரணம் ... 17
12. திருச்சபைச் செய்திகள் ... 18
13. மரணம் (தொடர்ந்து) ... 20
14. இரட்சிப்பாய் ... 22
15. விவிலிய - பொது அறிவு ... 23
16. போட்டி முடிவுகள் ... 24

ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயந் திறந்து............

யாழ் நகர் செல்ல ஒரு குடும்பம் தயாரானது,
இரத்மலானை சென்றது.
நிற்கவேண்டிய இடத்தில் அவர்கள் நிற்கவில்லை,
இதனால் விமானத்தளத்திற்கு செல்லுகின்ற
பஸ் வண்டியை அவர்கள் தவறவிட்டார்கள்.
அன்றைய விமான பயணத்தைத் தவறவிட்டார்கள்.
பறவாயில்லை,
பிறிதொரு நாளைக்கு அப்பயணத்தை மேற்கொள்ளலாம்.
ஆனால்,
மரணம் என்பது ஒரேயொரு Flight தான்
அதைத் தவறவிட்டால் ... ... ... ...
வேறு Flight கிடையாது.
பிரான்சு நாட்டில் இருந்து மகன் வந்தார்,
கோலகலமான திருமணம் அவருக்கு நடைபெற்றது.
கால்மாறி மாப்பிள்ளை வீட்டிற்கு வரவேண்டிய
நாள் வருமுன்னே
அந்தத் தாயார் இறந்து விட்டார்.

மணக்கோல வீடு, பிணக்கோல வீடாகியது.
அந்த இறந்துபோன அம்மாவின் உடலை
தூக்கிச்செல்ல பாடை செய்தார் ஓர் அன்பர்.
அந்த அம்மா செத்த 8ம் நினைவு நாளுக்கு
''வாருங்கள்'' என அவருக்கு அழைப்புக்கிடைத்தது.
''கொழும்பு செல்கிறேன், வந்திட்டால் வருவேன்''
என விடை பகர்ந்தார் அந்த நண்பர்.
8ம் நினைவு நாளில்,
கொழும்புசென்ற பாடை அமைத்த அன்பர் மரணமானார்
மரணம் ... சொல்லிக்கொண்டு வருவதில்லை ...
திடீரென வரும்
அது வரும்போது, அதுதான்எனக்குக் கிடைக்கின்ற Flight...
அதுவும் ஒருமுறை அமைகிற Flight
அதைத் தவறவிட்டால் ... ... ...
வேறு Flight உனக்குக் கிடையாது.
எனவே காலத்தையும் நேரத்தையும் பயன்படுத்து.
மரணத்திற்கு எந்தநேரமும் தயார் நிலையில் இரு.

★ ஆசிரியர்




மண்ணிலிருந்து வந்ததெல்லாம்
மண்ணுக்கே திரும்பும்.

சீராக் 41/10

# என் அன்னை விழித்துக்கொண்டாள்

★ தமிழ் நேசன்

ஒரு யுகத்துப் பிடிவாதத்தின் பின்
புதிய ஆடை கட்ட
என் அன்னை அன்று சம்மதித்தாள்.

ஆம். வத்திக்கானில் நடந்த அந்த
வரலாற்றுச் சம்பவம்
ஒரு புதிய வரலாற்றை
வரைய வழிவிட்டது.

பல நூற்றாண்டுத் தூக்கத்தின் பின்
மரபுப் போர்வையை
விலக்கிக் கொண்டு
அவள் அன்று விழித்துக்கொண்டாள்.
பூட்டிக் கிடந்த
யன்னலைத் திறந்து
விஞ்ஞான யுகத்தின்
வெளிச்சத்தைப் பார்த்தாள்.

மண்ணின் மதங்களெல்லாம்
அவள் விழிப்பைக் கண்டு
குசு குசுத்தன.
சரித்திர ஏடுகள்
சந்தோஷித்து ஆரவாரித்தன.
புதிய அத்தியாயமொன்றை
புளகாங்கித்துப் பதிந்து கொண்டன.

இறந்த மொழியொன்றின்
சிறகுகள் அன்றுதான் வெட்டப்பட்டன.
ஆம்! ''இலத்தீன் ஒன்றே
எங்கும் எதிலும்'' என்ற
பலத்த குரலொலி அன்று பலமிழந்தது.

சுதேச மொழியென்ற
சுந்தர ஆடையை
அவள் அணிந்துகொண்டாள்.

''தனக்காக உலகு'' என்று
தம்பட்டம் அடித்தவள்
''உலகுக்காகத் தான்'' என்ற
உண்மையை உணர்ந்து கொண்டாள்.
''என்னிடம் மட்டுமே
மீட்பு'' என்றவள்
''நன்மை உண்டேல்
எங்கும் மீட்பு'' எனத்
தன்னைத் தானே
திருத்திக் கொண்டாள்.

திருத்தந்தை 23 ஆம் அருளப்பர்!
திருச்சபையின் தலைமைப் பதவிக்கு
வரிந்து அழைக்கப்பட்டு
அமர்த்தப்பட்டவர்.
இடைக்காலத் திருத்தந்தை போன்று
இருப்பதற்குச் சம்மதித்தவர்.
அனைவராலும்
அனுதாபத்தோடு நோக்கப்பட்டவர்.
''பாவம் பெரியவர்
வயதில் முதிர்ந்தவர்
இருப்பதோ சில காலம்
அறுப்பதோ எதைத்தான்?'' என
பரிதாபமாகப் பேசப்பட்டவர்.
ஆனால்,
அரும்பெரும் காரியம் ஒன்றை
அவரைக் கொண்டே செய்வதற்கு
ஆண்டவர் திட்டமிட்டார்.
இரண்டாம் வத்திக்கான் சங்கம்
உரோமையில் கூட்டப்பட்டது!
வத்திக்கான் வரலாற்றில்
ஒரு புதுமை நிகழ்ந்தது!
ஆம்! அன்றுதான்
என் அன்னை விழித்துக் கொண்டாள்.

''திருச்சபையின்
கதவுகளைத் திறந்து விடுங்கள்.
உள்ளே இருக்கும்
அசுத்தக் காற்று வெளியேறட்டும்.
வெளியே இருக்கும்
நல்ல காற்று
உள்ளே வரட்டும்'' என்ற
புதிய புரட்சி வார்த்தைகளோடு
சங்கத்தைக் கூட்டினார்.
சரித்திரம் படைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிந்தவர்களின் ஆன்மாக்களின் அழியா அகத்தீடு (நிறைவு)

★ சகோ. ஞா. மரியநாதன்

''ஏனெனில் நீங்கள் இறந்து விட்டீர்கள். உங்கள் உயிர் கிறிஸ்துவோடு இறைவனுக்குள் மறைந்துள்ளது. நம்முடைய உயிராகிய கிறிஸ்து தோன்றும்போது, நீங்களும் அவரோடு மாட்சிமையில் தோன்றுவீர்கள்''
(கொலோ 3:3-4)

இறைவன் மனிதனைப் படைத்ததின் நோக்கம், இறைவனையும், அவரது இருக்கையையும், அவரது படைப்பின் மகத்துவத்தையும் அறிந்தும், உணர்ந்தும், அவரையும் பிறரையும் அன்புசெய்தும், அன்புப்பணிகளின் மூலம் நற்பேற்றுப் பலன்களையும் நித்திய வாழ்வையும் பெற்றுக்கொள்வதேயாகும். நித்திய வாழ்வு என்ன? ஒரே இறைவனையும் அவர் அனுப்பிய திருமகனையும் அறிவதாகும். இவ்வாழ்வைப் பெறவே பயணம் செய்து கொண்டிருக்கிறோம். இஸ்ராயேல் மக்கள் பல வேளைகளில் தற்காலிக கூடாரங்களை அமைத்து வாழ்ந்ததுபோல் நாமும் நிலையற்ற வாழ்வை இக்கூடாரம் போன்ற உலகிலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இப் பயண வாழ்விலே சோர்ந்து போகாமல் விழித்திருந்து செயலாற்ற வேண்டும். நமது வாழ்வு விண்ணை நோக்கியதாகவும், விண்ணரசின் மதிப்பீடுகளை வாழ்ந்தும், பகிர்ந்தும், இறைவனுக்குச் சாட்சியம் பகரவும் வேண்டும்.

ஒரு நாள் வரும். அந்த நாள் நினையாத முறையில், நினையாத நேரத்தில் வரும், அது எல்லோர்க்கும் வரும். பிறப்பு எவ்வாறு உண்மையோ அவ்வாறே இறப்பும் உண்மையாகும். கிறிஸ்துவுக்குள் இறந்து, அவருள் புதைக்கப்பட்டு, அவரில் உயிர்த்தெழவேண்டும். ''ஆண்டவருக்குள் இறப்பவர் பேறுபெற்றோர். ஆம், இனி அவர்கள் தங்கள் உழைப்பினின்று இளைப்பாறுவார்கள். ஏனெனில் அவர்கள் செய்த நன்மையே அவர்களோடு கூடவரும்'' (தி. வெ. 14:13)

பாவத்தில் இறப்பவர்கள் இருளுக்குச் சொந்தமானவர்கள். பரிசுத்தமான நிலையில் இறப்பவர்கள் ஒளிக்குச் சொந்தமானவர்கள். தங்கள் பாவங்களுக்கான பரிகாரம் செய்யாத நிலையில் இறப்பவர்கள் சுத்திகரிப்பு நிலை இடத்துக்குப் போவார்கள். இவர்கள் பிறரது இரக்கச் செயல்களில் தங்கியிருப்பவர்கள்.

''பாவம் புரிந்த வானதூதர்களை இறைவன் தண்டிக்காமல் விடவில்லை. இருள் நரகின் படுகுழிகளில் தள்ளி, அவர்களை அங்கே அடைத்துத் தீர்ப்புக்காக வைத்திருக்கிறார்''
(2 பேதுரு 2:4)

பரிசுத்தமும் பாக்கியமுமான நிலையில் படைக்கப்பட்ட தூதர்களுக்கும் தண்டனை கிடைத்தது. அதிகமாகக் கொடுக்கப்பட்டவர்களிடம் அதிகமாய்க் கணக்குக் கேட்கப்படும். ஒவ்வொருவரும் தங்கள் வாழ்வின் கணக்கை ஆண்டவர் திருமுன் எண்பித்துக் காட்டவேண்டும். இவ்வுலக சோதனைகள் எமக்கு வரவேண்டும். அவைகள் எம்மைத் தூய்மைப்படுத்தி நீதிமான்களாக்குகின்றன.

''சோதனைகளை மனவுறுதியோடு தாங்குபவன் பேறுபெற்றவன். இதனால் அவனது தகைமை எண்பிக்கப்படும். இறைவன் தம்மீது அன்பு செலுத்துவோர்க்கு வாக்களித்த வாழ்வை, அவன் வெற்றிவாகையாகப் பெறுவான்'' (யாக. 1:12)

பாவத்தில் இறப்பவர்கள் இறைவனைத் தரிசிக்கமாட்டார்கள். பரிசுத்த அருள்வரம் இவர்களில் இல்லை. பெறவேண்டிய தண்டனையைப் பெறுவார்கள்.

''இவர்கள் ஆண்டவருடைய வல்லமை விளங்கும் மாட்சிமையைக் காணமுடியாமல் அவருடைய திருமுன்னிருந்து அகற்றப்பட்டு, முடிவில்லாத அழிவைத் தண்டனையாகப் பெறுவர்'' (2 தெச. 1:9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவன் ஒரு அற்புதக் கவிஞன்

★ அன்புமணி

நீங்கள் ஒரு அற்புதம் என்றாள் மனைவி
நீயும் ஒரு அற்புதம் என்றான் கணவன்
நாம் ஒரு அற்புதம் என்றது குழந்தை
இந்தச் சமுகம் ஒரு அற்புதம் என்றது
அந்தக் குடும்பம்

இவ்வாறு உலகில் யாவற்றையும் ஒரு அற்புதமாகக் காண்கிறான் ஒரு கவிஞன்.

சின்னச்சின்ன நிகழ்வுகள்
சின்னச்சின்னச் சம்பவங்கள்
சின்னச்சின்ன வார்த்தைகள்
சின்னச்சின்ன செய்கைகள்

எல்லாமே அக்கவிஞனுக்கு அற்புதமாகத் தெரிகிறது. அது ஒரு கவி உள்ளம் இயற்கையில் இறைவனைக் காணும் அந்தக் கவிஞனிடம் இறைவன் சொன்னான் ''என் சிருஷ்டியில் மனிதன் அற்புதமானவன்'' கவிதா தேசத்தில் இது ஒரு திருப்பம்.

தமிழில் முதன் முதல் வசனகவிதை எழுதிய பாரதி பாடினான் ... ... ...

இவ்வுலகம் இனியது
இதிலுள்ள வான் இனிமையுடையது
காற்றும் இனிது
தீ இனிது, நீர் இனிது, நிலம் இனிது

இவ்வாறு இவ்வுலகில் நாம் காணும் - தினசரி உணரும் ஏராளமான காட்சிகளை இனியதாக அடுக்கிக்கொண்டு போகிறான் பாரதி கவிதை உள்ளத்தின் பரிணாம வளர்ச்சியில் கடவுளைத் தரிசித்த வாசகங்கள் இவை. இவ்வுணர்வை அன்றும் யாரும் மதிக்கவில்லே, இன்றும் யாரும் மதிக்கவில்லை.

''இயற்கையைப் பாடுகிறேன் - நான்
இறைவனைப் பாடுகிறேன்''

என அவ்வப்போது உதிரியாக ஒலித்த சில மெல்லிசைப் பாடல்களும் மக்களின் கவத்தை ஈர்க்கவில்லை.

ஆனால் இப்போது - பாரதி தோன்றி ஒரு நூறு வருடங்களுக்குப் பின் இயற்கையில் இறைவனைக் காணும் ஒரு கவிஞன் தோன்றியுள்ளான். அவன் பெயர் பெனி (Benny) மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஆனால் ஒரு வித்தியாசமான கவிஞன். இறைவனின் சிருஷ்டியான இப்பிரபஞ்சத்தில் ஒவ்வொரு அம்சத்தையும் அற்புதமாகக் காணும் கவி உள்ளம் படைத்தவர்.

''நான் என்னைத் தேடுகிறேன்'' அர்த்த புஷ்டியான தலைப்பைக் கொண்ட இக்கவிதைத் தொகுதி மட்டக்களப்பு 'ஜெஸ்கொம்' வெளியீடாக 15-8-99ல் வெளிவந்துள்ளது.

38 கவிதைகளை (வசன கவிதை / புதுக் கவிதை) கொண்டுள்ள இந்நூலில், ஒவ்வொரு கவிதையும், இயற்கையின் அற்புதத்தை மெய் சிலிர்க்க வெளிப்படுத்துகின்றது. காலடியில் கொட்டிக் கிடக்கும் இந்த அற்புதங்களை ரசிக்க முடியாமல், இறைவனின் பேரால் வேறு எதை எல்லாமோ செய்யும் மனிதனை பார்த்து அவை எள்ளி நகையாடுகின்றன.

''யார் இந்த நான்?'' என்ற தலைப்பில் இந்நூலின் முகப்பில் பல புதிய சிந்தனைகளைத் தருகிறார் கவிஞர்.

இலக்கியம் படைப்பதற்கு இலக்கணம் தேவையா? இல்லை. உண்மை இலக்கியம் ஆழமான அமைதியிலிருந்து பிறக்கிறது. இலக்கியம் படைப்பதற்கு வேண்டிய விஷயங்களை வாழ்க்கைக்கு வெளியே தேடாமல், வீட்டில் பள்ளிக்கூடத்தில் - பணித்தலத்தில் - பஸ்நிலையத்தில் - சைக்கிள் மிதிக்கையில் - புத்தகம் படிக்கையில் - தேநீர் குடிக்கையில் - எம் கண்ணுக்குத் தெரிவதையும், காதில் ஒலிப்பதையும் ஊடுருவிப் பார்த்தால் .. கூர்ந்து கேட்டால் (இலக்கியம் பிறக்கும்) எனக் கூறுகிறார் இக்கவிஞர்.

'நான் என்னைத் தேடுகிறேன்'
-நூல் விமர்சனம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருடைய ''தேடல்'' வித்தியாசமானது பிரபஞ்சத்தை அறிவதால் நான் என்னில் வளர்கிறேன்; என் வேர்களைத் தொடுகிறேன் என்றும் இயற்கையின் முன்னால் உன் தலைக் கனத்தை உடைத்தெறி - குழந்தையின் உள்ளத்தைச் சுவீகரி - உன்சிந்தனையை நிர்வாணமாக்கு - கூர்ந்துபார் - பிரபஞ்ச ரகசியம் - உனக்கு வெளிப்படும் என்றும் அவர் கூறுகிறார். இதுவே ஓர் உண்மையான இலக்கியவாதியின் தேடலாக இருக்கவேண்டும் என்பது வெளிப்படை.

ஒரு நீண்டகால துறவறப் பயணத்தில் சில மைல் கற்களைக் கடந்த ஒருவர் சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்துகிறார். அதைக் கேட்ட மக்கள் இவை அனைத்தும் நாங்கள் ஏற்கனவே கேட்டிருக்கிறோம். புதிதாக நீ ஒன்றும் பேசவில்லையே என்கின்றனர்.

அவன் சொல்கிறான், ஒரு சமுத்திரத்தின் நீர் ஆவியாகி மேலெழுந்து மழையாக மாறி, எல்லாத் தேசங்களுக்கும் பொழிவதைப்போல் ... ... அடிப்படையில் உண்மை ஒன்றுதான் ... அதைச் சொல்லும் விதத்தில் தான் ஒரு இலக்கிய வாதியின் திறமை உள்ளது ... ...

இது எவ்வளவு மகத்தான உண்மை!

இத்தகைய ஒரு பார்வையில் ''சாதாரணமே அசாதாரணம்'' ஆகிவிடும். அந்த நிலையில் ''இலக்கு'' வித்தியாசமாகிறது. குருப் பட்டம் பெறுவது எனது இலக்கல்ல; இறைவனைத் தேடும் இந்த நீண்ட பயணத்தில் அதுவும் ஒரு ''மைல்கல்'' என்ற தெளிவு பிறக்கிறது.

அவ்வாறே ''தியானம்'' என்பதற்குப் புதிய பொருள் தெரிகிறது. ''நான் என்னை இறைவனில் இழக்க, இறைவன் தன்னை என்னில் இழக்க ஒருவருக்குள் ஒருவர் தொலைந்துபோன அந்தக் கணப்பொழுது'' ஆம், அதுதான் உண்மையான தியான நிலை!

இவ்வாறே செபம் பற்றிய போலித்தனத் தனத்தையும் அவர் அவதானிக்கிறார்.

''முற்றத்தில் ரோசா, வாசலில் மாக்கோலம், புல்நுனிகளில் பனித்துளி சூழலில் இளந்தென்றல்'' - இவை எல்லாவற்றையும் கவனியாது ஒரு பெண், குதிச்செருப்பால் கோலத்தை மிதித்து, புல்நுனிகளை நசுக்கி, போர்வையால் தென்றலைத் தவிர்த்து, ஆலயத்துள் சென்று செபம் செய்கிறாள். இறைவன் என்ன செய்வான்? - சிரித்தான்.

இறைவன் ஒரு கலைஞன்! எப்படி? பூமியின் மலைகளும், குன்றுகளும், பாறைகளும் பள்ளத்தாக்குகளும், அவன் அன்றாடம் செதுக்கும் சிற்பம்தானே. இறைவன் ஒரு கவிஞன்! எப்படி? அவன் அன்றாடம் படைக்கும் கவிதை மனிதன்தானே - அந்தமாபெரும் கலைஞனின் முன்னால் மனிதக் கலைகளெல்லாம் மண்டியிட்டு வணங்கவேண்டும் அல்லவா?

இத்தகைய பார்வை, நம் கலைஞர்களுக்கும், கவிஞர்களுக்கும் வந்தால் ''நான்தான் படைத்தேன்'' என்ற தலைக்கனம் தகர்ந்து இறைவனின் கருவியாகவே நாம் பயன்படுகிறோம் என்ற தெளிவு ஏற்படும். இலக்கியப் படைப்பாளிகள் இதை உணர்வார்களாக.

இவ்வாறு, வாசல்கள், இறையியல், நீர்க் கோலம், மரம், சாயல், அத்வைதம், அழகு மார்க்கம், அனுபவம், ஞாபகச்சிறை, முத்த மொழி யுகமாற்றம், வெளிப்பாடு, மகிழ்ச்சி, பார்வை, தெளிவு, ஆன்மீகம், அந்தி, திருப்பலி, வரவேற்பு, மீட்டல், தனிமை, ரகசியம். தியானம், மாணவம், உறவு, மௌனத்தின் பாடல் முதலிய தலைப்புகளில் புதுமைக் கருத்துகளை வெளிப்படுத்துகிறார் கவிஞர் பென்னி.

செய்யுள் வடிவங்கள் காலத்துக்குக்காலம் மாறிவந்திருக்கின்றன. அவை மரபுக்கவிதை, புதுக்கவிதை, ஹைக்கூ கவிதை, வசனகவிதை எனப் பல மாற்றங்களைக் கண்டுவருகின்றன. வசனங்களின் மூலம் அழகான கவிதைகளை கவி உள்ளத்தை வெளிப்படுத்தலாம் என்பதைக் கவிஞர் பெனி நிறுவியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் கவிதை என்பது என்ன? அழகிய கருத்தே கவிதை ஆகின்றது. கருத்துக்கும் அழகு உண்டா? ஆம்! ''உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்'', ''உள்ளம் நல்லதானால் மண்ணும் பொன்னாகும்'', ''உள்ளம் பெரும் கோயில், ஊனுடம்பு ஆலயம்'' உள்ளக்கமலம் ஒரு தெய்வீகம், அதிலிருந்து பிறக்கும் கருத்துக்கள் அழகியவை - அவை கவிதைகள் இன்றைய கவிஞர்கள் நன்கு அறிந்திருக்க வேண்டிய மாபெரும் உண்மை இது. கவிஞர் பெனி இத்தகைய கவிதைகளின் முன்னோடியாகிறார். மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது சில கவிதை வரிகள் சாதாரண வசனங்களாகத் தோன்றினாலும், அவற்றினுள் தத்துவ முத்துக்கள் உறைந்து, ஒரு புதிய சிந்தனையைத் தோற்றுவிப்பதை இக்கவிதைகளில் பிரக்கக் காணமுடிகிறது.

''உலகம் எப்போது
அழகாக இருக்கிறது தெரியுமா?
தான் நேசிக்கும் ஒரு ஜீவனால்
தானும் நேசிக்கப் படுகிறேன் என்று
அறிகிற நிமிஷங்களில் ... ...
(''அழகு என்ற கவிதையில்)

இரண்டொரு கவிதைகளில், நமக்கு முரணாகத் தோன்றும் எண்ணக் கருக்களினூடே முக்குளித்து நம்மால் இலகுவில் புரிந்துகொள்ள முடியாத தத்துவங்களையும் அவர் கூறுகிறார்.

''அவர்கள் ஒரே அறையில்தான் அமர்ந்
........................ திருந்தார்கள்
தெய்வநிலையை எய்துவதைப்போல்
அவர்கள்
மௌனத்தின் பரிபூரணத்தை
முழுவதும் ஸ்பரிசித்தார்கள்
...............................
அதற்குப் பெயர்
காதலல்ல, காமமல்ல, நட்பும் அல்ல
தெய்வீகம், தெய்வீகம், தெய்வீகம்''
(''அத்வைதம்'' என்ற கவிதையில்)

சில கவிதைவரிகள் அதிர்ச்சி வைத்தியமாகவும் அமைந்துவிடுகின்றன.

''நேற்றுக் குழந்தையாய்ப் பார்த்தவள்
இன்று குமரியாய் வளர்ந்து
''நீங்கள் எங்கள் வீட்டில்
சாப்பிடவே மாட்டீர்களா'' என்று
செல்லமாகக் கோவிப்பதில்
சிந்தை தொலைத்ததுண்டா''
(''மார்க்கம்'' என்ற கவிதையில்)

சில புரிந்துகொள்ள முடியாத உருவகங்களும், அவ்வப்போது தலைகாட்டுகின்றன.

''சூரியனின் முத்தம் விடியல்
கடலின் முத்தம் அலைகள்
முகிலின் முத்தம் மழை
நிலவின் முத்தம் குளுமை''
(''முத்தமொழி என்ற கவிதையில்)

புதிய சொற்களும், புதிய உவமைகளும், புதிய உருவகங்களும் இவரது கவிதைகளில் ஆங்காங்கே பளிச்சிடுவதைக் காணமுடிகிறது. அவை பரவசமூட்டவும் செய்கின்றன.

''முத்தமொழி'' என்ற கவிதையில் -

''உள்ளத்தின் ஆழத்திலிருந்து
உதடுகளில் வந்து உட்கார்ந்து
உயிர்தரும் முத்தம்
ஒரு சிறந்த இலக்கியம்''

அர்த்த புஷ்டியான வார்த்தைப் பிரயோகத்தை இவ்வரிகளில் நாம் தரிசிக்கலாம்.

சில கவிதைத் தலைப்புகளிலும் இத்தகைய புதுமைமையைக் காணமுடிகிறது. ''ஞாபகச்சிறை'' ''முத்தமொழி'' ''மாணவம்'' ''அத்வைதம்'' - இவை சில உதாரணங்கள். தலைப்புகளில் மட்டுமல்ல கவிதை வார்ப்புகளிலும் அத்தகைய புதுமையைக் காண முடிகிறது.

''ஞாபகச் சிறை''யில்
''இலக்கியம் போன்றவளே!
எப்படி மறப்பேன்
என் தாய் மொழியையும்
உன் ஞாபகங்களையும்''

12ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரந்த மனம் வேண்டும்

தான் வாழ வேண்டுமென, எண்ணி வாழ்தல்,
தவறொன்றுமில்லை, மெத்தச் சரியே ஆனால்
தான் மட்டும்தான், வாழ வேண்டுமென்ற,
“தற்குறியாய்” இருப்பது தான் தவறேயாகும்!
தான் வாழ்வதோடு பிறர் தாமும் வாழத்
தனக்கியன்ற வழியிலவர்க் குதவுகின்றோர்,
தானிந்தப் புவிவாழ்வுக் குகந்தோர் மற்றோர்,
தமைத் திருத்திக் கொண்டிடுதல் வேண்டுமன்றோ?

★ ★ ★

வியாபாரம் தனில்லாபம் தன்னைக்கூட்டி
விற்பவனும், பொருள்தேடப் பாடுபட்டு,
அயராது உழைக்கின்ற தொழிலாளிக்கு,
அநியாயம் செய்பவனும் பாவியாவான்!
வியாபாரி நுகர்பவருக்குதவ வேண்டும்!
விலைகூட்டி விற்பதனில் நியாயம் வேண்டும்!
துயருற்று தொழில் செய்வோன் வாழவேண்டும்!
துணையாக மற்றவர்கள் இருக்கவேண்டும்.

★ ★ ★

ஒருவனுக்கு உணவில்லை யென்றால் இந்த
உலகினையே அழிப்பதென்ன நீதி அந்த
ஒருவனுக்கு உதவாத உலோபி தம்மை,
ஒழிப்பது தான் சரியென்று சொல்வோம் நாமே
கருமிகளைத் திருத்த வழி தேட வேண்டும்!
கயமைகளை ஒழிக்க வழிகாணவேண்டும்
குருத்தினிலே பரந்த மனப்பான்மை தன்னை
இளம் சிறார்களுக்கினிதே ஊட்டவேண்டும்.

தே. அ. விமலதாசன்
மூதூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித நாட்டுப் பயணம்

## 38 - இறுதி அங்கம்

★ அருள்தந்தை பி. ஜோசப்

### எரியும் முட்செடி

காலை எட்டு மணியளவில் புனித கத்தரின் ஆலயத்தையும், அதனைச் சுற்றியுள்ள துறவற மடத்தையும், மடத்திலிருந்த வரலாற்றுப் பெருமைமிக்க பொருட்களையும் பார்வையிடச் சென்றோம். எரியும் முட்செடிக்கு அருகில்தான் அம்மடம் கட்டப்பட்டதாக நம்பப்படுகின்றது. அந்த முட்செடியைப் பார்க்கும் ஆவலில் அங்கு சென்றோம். சுமார் 6 அடி உயரமுள்ள முட்செடி இருந்த இடத்தைச்சுற்றி சிறிய மதிற்சுவர் எழுப்பியிருக்கின்றனர். அதனால் எவருமே அதனைத் தொடமுடியாதவாறு தடுத்துள்ளனர். அது ஏறக்குறைய நம் நாட்டிலுள்ள கோரப்புல் பற்றை போன்று அடர்த்தியாகப் படர்ந்து ஓங்கி வளர்ந்து நின்றது. சிலது காய்ந்தும் சில பசுமையாகவும் தோற்றமளித்தன. மோயீசன் காலத்தில் இருந்த முட்செடிதான் தற்போதுள்ள முட்செடி என்று யாரும் சந்தேகம் கொள்வதில்லை. எல்லோரும் ஒரு நம்பிக்கையுடன் அதனை ஏற்றுக்கொள்கின்றனர். அதனைத் தொட்டுப் பார்க்க முடியாவிட்டாலும் அதனருகில் நின்று படம்பிடிக்க அனுமதி இருந்ததால் நாம் எல்லோரும் குழுவாகவும் தனியாகவும் நின்று எரியும் முட்செடியை படம் பிடித்துக் கொண்டோம்.

பின்னர், பல நூற்றாண்டுகளாக கிரேக்க கிழைத்தேய சபையைச் சார்ந்த துறவிகளால் நடாத்தப்படுகின்ற துறவியர் மடத்தைச் சுற்றிப்பார்த்தோம். இம்மடத்தின் பெருமை என்னவெனில் கிறிஸ்தவத்தின் முறிபடாத 1500 ஆண்டு வரலாற்றினை அழியாமல் காக்கக்கூடிய ஏறக்குறைய 3000க்கும் மேற்பட்ட பழம்பெருமை வாய்ந்த கையேட்டுப் பிரதிகளையும் (Manuscripts), ஆரம்ப காலத்து புனிதச் செதுக்கு வண்ண ஓவியங்களையும் (Icons) இம்மடம் பராமரித்து வருகின்றது. அத்துடன் 4ம் நூற்றாண்டில் வாழ்ந்து வேதசாட்சி மரணமெய்திய அலக்சாந்திரியாவைச் சேர்ந்த புனித கத்தரினம்மாவின் எலும்புகள் இம்மடத்திலமைந்துள்ள ஆலயத்தில் வைக்கப்பட்டு இருப்பதையும் நேரில் காணும் வாய்ப்பு எமக்குக் கிட்டியது.

அனைத்தையும் கண்டு வியந்து விட்டு நாங்கள் தங்கியிருந்த விடுதிக்குச் சென்று குளித்து முழுகி காலையுணவை சுமார் 10 மணியளவில் உண்டோம். ஏனெனில் நாங்கள் மீண்டும் எகிப்திலிருந்து வந்தவழியாக இஸ்ராயேலின் எல்லையைக் கடந்து எருசலேம் போகவேண்டும் என்பதால் நீண்ட பயணத்துக்குத் தயாரானோம். எங்களை இஸ்ராயேல் நாட்டிலிருந்து சீனாய் மலையடிவாரத்துக்குக் கொண்டுவந்த சொகுசு வண்டி காத்திருந்தது. அதில் ஏறிப் பயணம் புறப்பட்டபோது சீனாய்மலை அனுபவம் எல்லாம் என் மனத்தில் அழியாத பிம்பங்களாக வந்து போய்க்கொண்டிருந்தன. இஸ்ராயேல் மக்கள் இதே பாலைநிலத்தில் ஏறக்குறைய 40 ஆண்டுகள் வாழ்ந்திருக்கின்றனர். நாங்களோ சுமார் 40 மணி நேரத்தில் அனைத்தையும் பார்த்துவிட்டு பாலைவனத்தைக் கடந்து கொண்டிருக்கிறோம் என்ற நினைவுதான் என் மனத்தில் ஆழமாகப் பதிந்தது. இது வாழ்க்கை. அவர்கள் 40 ஆண்டுகள் அடைந்த அனுபவத்தை நான் 40 மணி நேரத்தில் பெறமுடியுமா? ஆயினும் அவர்களின் அனுபவத்திற்கு மேடையாக அமைந்த இடத்தை யாவது தரிசிக்க வாய்ப்பு கிடைத்ததே என்று இறைவனுக்கு நன்றி கூற மறக்கவில்லை.


இஸ்ராயேலின் எல்லையை அடைந்தபோது கெடுபிடிகள் எதுவுமின்றி உள்ளே நுழைந்தோம். எய்லத் நகரை மீண்டும் ரசித்துக்கொண்டே எருசலேம் புறப்பட்டோம். எருசலேமுக்கு வந்து சேர்ந்தபோது இரவு 7 மணி. மறுநாள் எமது புனிதநாட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணத்தின் இறுதி நாள். எருசலேமிலிருந்து டெல் அவிவ் (TEL-AVIV) சென்று விமான நிலையத்தை அடைந்தோம். சுங்கப் பரிசோதனை கடுமையாக இருந்தது. ஏனெனில் இஸ்ராயேல் மக்கள் யாரையும் நம்புவதில்லை. எல்லாம் தற்பாதுகாப்புக்காகத்தான். நம்பி ஏமாற்றமடைந்த இனம். இஸ்ராயேலின் விமானந்தான் மீண்டும் எம்மை உரோமை நகர் கொண்டுசெல்லக் காத்திருந்தது. அதில் ஏறுவதற்கு முன்னர் புனித நாட்டு மண்ணை மீண்டும் முத்தமிட்டுவிட்டு, புனித நாட்டுக்கு 'குட்பை' (Good Bye) சொல்லிவிட்டு விமானத்தில் காலடி எடுத்து வைத்தோம். இவ்விதமாக எமது புனித நாட்டுப் பயணம் முடிவுற்றது. இறைவனின் காலடி புனித நாட்டு மண்ணில் மட்டும் பதியவில்லை. எம் இதயங்களிலும் பதிந்து விட்டது. அதனை அழிப்பது நடக்க முடியாததொன்றாகும்.

- நிறைந்தது.



# நன்றி நவில்கின்றோம்

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக 'புனித நாட்டுப் பயணம்' தொடரை எழுதி வந்தவர் அருட்தந்தை பி. ஜோசப் அவர்கள். 'புனித நாட்டுக்கே சென்று பார்ப்பதுபோல் இருக்கிறது' என்று கட்டுரைப் படித்துவந்த வாசகர் பலர் எம்மிடம் தெரிவித்தனர். பய பயணக் கட்டுரை எழுதுவது சிரமமான பணி. தாம் பார்த்த இடங்களை, அவற்றின் வரலாற்றுப் பின்னணிகளை, அவற்றின் குறிப்பிடத்தக்க அம்சங்களை, தற்போதைய சூழ்நிலைகளை, அது தரும் உணர்வுகளை அனைத்தையும், அறிந்து, உணர்ந்து, ஆயத்தப்படுத்தி வாசகர் எளிதாகப் புரிந்துகொள்ளும் விதத்தில் வடிப்பது சாமான்யமல்ல. ஆயினும் 'புனித நாட்டுப் பயணம்' அதில் வெற்றி பெற்றுள்ளது என்பதற்கு வாசகர்களின் கருத்துக்களே சான்று.

கட்டுரையை எழுத ஆரம்பித்தபோது அருள்தந்தை அவர்கள் உரோமையில் உயர் கல்வியை முடித்து வந்து மட்டக்களப்பில் தான் பணிபுரிந்து கொண்டிருந்தார். ஆயினும் இடையில் கண்டி, அம்பிட்டியாவிலுள்ள தேசிய குருமடத்தில் ஆசிரியப் பணிக்குச் செல்லவேண்டி நேர்ந்தது. அப்படியிருந்தும், சுமையான பணிகளுக்கு மத்தியிலும் இரண்டு ஆண்டுகளாக கண்டியிலிருந்து கொண்டே நாம் கேட்காமல், நினைவு படுத்தாமல் தாம் ஏற்றுக்கொண்ட பொறுப்பை செம்மையாக நிறைவேற்றிய பொறுப்புணர்வை என்ன சொல்லிப் பாராட்டினாலும் தகும். ஏனெனில், ஏற்றுக்கொண்ட பொறுப்பை நிறைவேற்ற சிலரிடம் கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும், தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருக்கவேண்டும். அப்படிக் கேட்டாலும்கூட சிலருக்கு நிறைவேற்ற நேரமிருக்காது. நேரமில்லை என்று தெரிவிக்கவும் நேரமிருக்காது. இந்த அனுபவங்களூடாக அருள்தந்தை யோசப் அவர்களைப் பார்க்கும்போது அவர் மிகவும் உயரத்தே நிற்கிறார்.

ஒரு காலத்தில் 'தொண்டன்' ஆசிரிய பீடத்திலும் இணைந்து பணியாற்றிய அவர் தொண்டன் சஞ்சிகையின் வளர்ச்சியில் மிகவும் அக்கறை கொண்டு பல்வேறு வகைகளில் பங்களித்தவர். அருள்தந்தை அவர்களுக்கு தொண்டன் நிர்வாகத்தின் சார்பிலும், வாசகர்சார்பிலும் நெஞ்சு நிறைந்த நன்றியைக் கூறிக்கொள்கிறோம். அத்துடன் 'புனித நாட்டுப் பயணம்' தொடர் கட்டுரையை நூலுருவாக்கும் முயற்சியிலும் அடிகளார் ஈடுபட்டுள்ளார் என்ற நல்ல செய்தியையும் வாசகர்களுக்குச் சொல்லிவைக்கிறோம்.

- மலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி நாடகப் பயிற்சி நெறியாளர் அருட்சகோதரி கிளேயர் I. C. M. (தமிழ்நாடு) அவர்களுடன் ஒரு சந்திப்பு

## - கடந்த இதழ் தொடர் -

★ தமிழகத்தில் தமிழனின் ஒட்டுமொத்த எதிரி யார் என்று நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்?

❈ சாதியத்தை தோற்றுவித்த பார்ப்பணியர்கள்தான். - அதைவிட இன்று வந்தேறிகள் மார்வாடிகள் என்று அழைக்கப்படும் ஆந்திரர்கள், மலையாளிகள் பெருமளவில் தமிழகத்தில் வாழ்கின்றார்கள். தமிழன் பம்பாயிலும் கர்நாடகத்திலும், அடிபட்டுத் துரத்தப்படுகிறான். சென்னையில் 80விதமான இடங்களில் ஆந்திரர்கள் கன்னியாகுமரியில் பல்வேறு வளமான இடங்கள் மலையாளிகளின்கையில்.

★ தமிழ் நாட்டில் தமிழ் இன மொழி உணர்வு வளர தற்போதுள்ள ஆட்சி எந்த வகையில் ஆக்கப்பூர்வமாக செயற்படுகிறது?

❈ கலைஞர் ஒரு பழுத்த அரசியல்வாதி. அவருக்கு எப்படி காய்களை நகர்த்துவது என்பது தெரியும். வாரிசு அரசியல் பண்ணும் ஒரு அரசியல்வாதி திராவிட முன்னேற்றக் கழக கொள்கைகளை நடைமுறைப்படுத்துபவராக அல்ல, இனத்திற்கான எதிரியாகத்தான் இருக்கின்றார்.

★ ஒடுக்கப்படும் மக்களின் இன்றைய விழிப்புணர்விற்கு அடிப்படையாக இருப்பவை தந்தை பெரியாரின் சமூக சித்தாந்தங்களே என நாம் கருதுகிறோம். பார்ப்பணியத்திற்கு எதிரான கருத்தியலை அழுத்தமாக முன் வைத்தவர் தந்தை பெரியார். இன்று அவரது கொள்கைகளை புறக்கணித்துவிட்டு திராவிட கழகங்கள் ஆட்சியிலிருப்பதும் ஒரு பார்பண பெண்ணையே திராவிடக் கட்சிக்கு தலைவியாக ஏற்றுக்கொண்டிருப்பதும் எதைக்காட்டுகிறது?

★ சந்தித்தவர்: பெனி யே. ச.

❈ இன்றைய தமிழக திராவிட கட்சிகளினதும் புதிதாக முளைத்த அரசியல் கட்சிகளினதும் நிலைப்பாடு என்பது கொள்கையையோ கோட்பாட்டையோ சார்ந்தது அல்ல, அனைத்து கட்சிகளினதும் நோக்கம் ஒன்றுதான். வாக்குகள் பெறவேண்டும். ஆட்சியைப் பிடிக்கவேண்டும். அதற்காக யாரோடு வேண்டுமானாலும் கூட்டணி வைத்துக் கொள்ளலாம். இன்று கலைஞர் பா. ஜ. கட்சியுடன் கூட்டணி வைத்துக்கொள்வார் என்றோ C. P. M. மும் காங்கிரசும் ஜெயலலிதாவுடன் கூட்டணி ஏற்படுத்திக்கொள்வார்கள் என்றோ ஐந்து வருடங்களுக்குமுன் யாருமே எதிர்பார்த்திருக்க முடியாது.

அடிமட்டத்தில் தொண்டர்கள் என்னதான் கருத்தியல் ரீதியாகவும் சித்தாந்த ரீதியாகவும் சிறப்பாக செயற்பட்டாலும் இந்தத் தலைவர்களின் சிந்து விளையாட்டுக்களால் தொண்டர்கள் ஊக்கம் இழக்கிறார்கள். அரசியல் கட்சிகளிடம் எந்தவிதமான கருத்தியலுக்கோ சித்தாந்தத்திற்கோ தளம் இல்லை என்றே சொல்லலாம்.

★ கிட்டத்தட்ட 15 வருடங்களாக 'வீதி நாடகம்' என்னும் இந்தக் கலைத்துறையில் ஈடுபாடு கொண்டுள்ள நீங்கள் ஒடுக்கப்படும் மக்களின் வளர்ச்சிப் போக்கை எவ்வாறு அவதானிக்கிறீர்கள்? எந்த அளவில் அவர்கள் மத்தியில் மாற்றம் நிகழ்ந்துள்ளது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❊ மக்கள் மத்தியில் பாரிய புரிந்துணர்வு ஏற்பட்டுள்ளது. குட்டக் குட்டக் குனிந்து போன நிலைமாறி திருப்பி அடிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். தமக்கென ஒரு சமூக அங்கீகாரத்தையும் அடையாளத்தையும் தேடத் தொடங்கியிருக்கிறார்கள். இந்த நிலை 15 வருடங்களுக்கு முன்பு இல்லை.

★ இலங்கையில் உங்களது முதல் வீதி நாடக பயிற்சி அனுபவம் எப்படி இருந்தது?

❊ கடந்த வருடம் அக்டோபர் மாதம் நுவரெலியாவில் பயிற்சி முடித்தபின் ஒரு தோட்டத்தில் வீ. நா. நிகழ்த்தினோம். மக்கள் அதிகமாக வரமாட்டார்கள் என்று கூறினார்கள். ஆனால் நிகழ்ச்சியை ஆரம்பித்தவுடன் கட்டாயம் அதிகமானோர் வருவார்கள் என்ற ஒரு நம்பிக்கை இருந்தது. அது வீண்போகவில்லை.

அந்தத் தோட்டத் துரையும் நிகழ்ச்சியைப் பார்க்க வந்திருந்தார். அவர் முன்னாலேயே நிர்வாகத்தைச் சாடி நாடகம் நிகழ்த்தியது வித்தியாசமானது. அவர்தான் அந்த தோட்டத்தில் எமது நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தார். அவர் 'ரொம்ப நன்றாக இருந்தது' என்று பாராட்டியதும் அடுத்த நாள் சற்று அழுத்தமாக தோட்டத்துரைமாரைச் சாடி நாடகம் போட அவர் முகத்திற் அடித்தாற்போல் எழும்பி போய்விட்டார்.

மக்கள் தமிழகத்திலிருந்து வந்திருக்கிறார்களே என்று காட்டிய நட்பும் அன்பும் மரியாதையும் மறக்க முடியாதவை. இந்த மக்களுக்குத் தமிழகத்திலிருந்து நாம் என்ன செய்கிறோம் என்ற சிந்தனையும் எழுந்தது.

★ வீதி நாடகப் பயிற்சியைத் தவிர்ந்த வேறு எத்துறைகளில் நீங்கள் ஈடுபடுகிறீர்கள்?

❊ இந்தத் துறையிலே ஏறக்குறைய 90 கலைஞர்களை - கலைக்குழுக்களை ஒன்றிணைக்கும் ஒருங்கிணைப்பாளராக செயலாற்றுகிறேன். பெண் விடுதலை சம்பந்தமான தலைமைத்துவ பயிற்சிப் பாசறைகள் - கிராமங்களில் பணிபுரியும் எமது சபை சகோதரிகள் மத்தியில் சமூகப் பகுப்பாய்வு ஆகியவற்றையும் மேற்கொள்கிறேன். மாற்று மருத்துவம் என்று நாட்டுப்புற வைத்தியம் பற்றியும் மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்வது உண்டு.

---

7ம் பக்கத் தொடர்ச்சி ... ... ...

''பார்வை'' என்ற கவிதையில்

''உன்பார்வை மட்டும்
சூரியனையும் கடந்து
நட்சத்திரங்களையும் ஊடுருவட்டும்''

இத்தகைய வார்ப்புகள் கவிதைகளுக்கு ஒரு புதிய பரிமாணத்தை அளிக்கின்றன.

வைரமுத்துவையும் கவிக்கோ அப்துல் ரகுமானையும் படித்து அவர்களது சொற்கோர்வைகளை நயக்கும் நமக்கு இதோ நம்மிடமும் ஒரு கவிஞர் இருக்கிறார் என்ற பெருமிதத்தையும் மன நிறைவையும் தருகின்றன கவிஞர் பென்னியின் கவிதைகள்.

---

ஆசிரியர்: ''இந்த தேசப்படத்திலே சோமாலியாவைத் தேடிக் கண்டுபிடியுங்கள்''

மாணவன்: ''தேடவேண்டிய அவசியமே இல்ல சார் இலங்கைகூட இப்போது சோமாலியாதான் சார்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை-இலக்கிய மஞ்சரி



## வடமொழிப் புராணத்தில் இயேசு

மகாபவிஷ்யம் என்ற வடமொழிப் புராணம் இயேசுவை ஈசா (Issa) என்று கூறுகிறது. இஸ்லாமியரும் ஈசா (Issa) என்றே சொல்கிறார்கள். (திருக்குர்ஆன் ஈசா நபி என்று கூறுகிறது. ''ஈசுவரன்'' (எல்லாவற்றையும் அடக்கி ஆளுபவர்) என்ற வடமொழிச் சொல்லே 'ஈசா' என்று ஆயிற்று. இயேசு ஒரு கன்னியின் வயிற்றில் அவதரித்தார், சிலுவையில் அறையப்பட்டார், அவர் தேவதூதர் என்று இப்புராணம் கூறுகிறது. ஐந்தாயிரம் ஆண்டுக்கு முன் எழுதப்பட்ட இப்புராணத்தில் பிற்காலத்தில் இயேசுவின் வரலாறு இடைச் செருகலாகச் சேர்க்கப்பட்டிருக்க வேண்டுமென்று அமெரிக்காவைச் சேர்ந்த அருள்திரு ஆல்வின் வி. பி. ஹார்ட் (Krishna Consciousness and Christiauity நியூயோர்க், 1992) கருதுகிறார்.

## ஆசிய மொழிகளில் முதல் இதழ்

ஆசிய மொழிகளிலே முதன் முதலாக வெளிவந்த இதழ் தமிழ் மொழியில்தான் வெளிவந்தது என்றால் நம்புவீர்களா? நம்பத்தான் வேண்டும். உண்மை அதுதான். 1812ம் ஆண்டில் சென்னை ஞானப்பிரகாசம் வெளியிட்ட 'மாசத் தினச்சரிதை' என்னும் மாத இதழ்தான். ஆசிய மொழிகளிலே அச்சான முதல் இதழ். அதுமட்டுமல்ல இதழ் நடத்திய முதல் இந்தியரும் தமிழ்க் கிறிஸ்தவரான ஞானப்பிரகாசம்தான். ஆசியாவிலே இதழ் வெளிவந்த முதல் மொழி தமிழ் மொழிதான்.

இந்தியாவிலே முதன் முதல் அச்சுவாகனமேறிய மொழி தமிழ். அச்சிடும் தாள் தயாரிக்கப்பட்டது, அச்சிடும் மை தொழிற்சாலை உருவானது, இந்தியாவின் முதன் முதல் அச்சு எழுத்துக்கள் வார்க்கப்பட்டது எல்லாமே தமிழ் நாட்டில்தான். தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டுக்கும் பெருமை சேர்க்கும் இந்த வரலாற்றுச் சாதனைகளைப் புரிந்தவர்கள் கிறிஸ்தவர்கள் என்பது பெருமைக்குரியதல்லவா?

## எத்தனை இதழ்கள்?

தமிழில் இதுவரை (1996) வெளிவந்த கிறிஸ்தவ இதழ்கள் எத்தனை தெரியுமா? 1600 கிறிஸ்தவ இதழ்கள் வெளிவந்துள்ளன என்று குறிப்பிடுகிறது 'தமிழ்க் கிறிஸ்தவ இதழ்கள் ஓர் ஆய்வு' என்னும் நூல். தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் 'ராணி' வார இதழின் ஆசிரியரான அ. மா. சாமி அவர்கள் இந்நூலை எழுதியுள்ளார். தமிழில் முதன் முதல் வெளிவந்த கிறிஸ்த இதழ் ''தமிழ் மெகசின்'' என்பதாகும். இதனை சென்னை சமயநூல் சங்கம் 1831ல் வெளியிட்டது.

## அவுஸ்திரேலிய தமிச் சங்கம் நடத்திய போட்டியில் பரிசு

அவுஸ்திரேலியாவில் செயற்படும் தமிழ்ச் சங்கம் நடத்திய கவிதை, சிறுகதைப் போட்டி முடிவுகள் வெளியாகி உள்ளன. கவிதைப் போட்டியில் மட்டக்களப்பைச் சேர்ந்த பிரபல கவிஞர் செ. குணரெத்தினம் முதல் பரிசு பெற்றுள்ளார் இரண்டாம் பரிசு துறைநீலாவணையைச் சேர்ந்த கனகசபை என்பவருக்குக்கிடைத்துள்ளது.

சிறுகதைப் போட்டியில் மட்டக்களப்பைச் சேர்ந்த எழுத்தாளரும், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தருமான ஓ. கே. குணநாதன் இரண்டாம் பரிசு பெற்றுள்ளார். மூத்த எழுத்தாளரான மூதூர் வ. அ. இராசரெத்தினம் அவர்களுக்கு மூன்றாம் பரிசு கிடைத்துள்ளது.

பரிசு பெற்றுள்ள நமது எழுத்தாளர்களைப் பாராட்டுகிறோம்

✲ திருமூலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு கிறிஸ்தவ குழுமங்கள்-என்ன இது?-2

★ அருட் கலாநிதி டொமினிக் சாமிநாதன்

இயேசு ஆண்டவர் தனது பணியைத் தொடர்ந்து செய்யப் பன்னிருவரைக் கொண்ட ஒறு சிறு குழுவையே மிகவும் முக்கியமாகத் தயாரித்தார் என்பதை அவருடைய செயற்பாடுகளும் அவர் பன்னிருவர் மட்டில் காட்டிய கரிசனைகளிலிருந்தும் காண முடிகின்றது.

ஆதித்திருச்சபையும், ஆண்டவர் இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றிச் சிறு குழுக்களாகவே இயங்கியதையும் செயல் பட்டதையும் திருத்தூதர் பணியிலிருந்தும் புதிய ஏற்பாட்டுத் திருமடல்களிலிருந்தும் காணமுடிகின்றது.

ஆரம்ப காலத்தில் திருச்சபையும் ஒரு சிறு குழுவாகவே இருந்தது. கிறிஸ்தவர்கள் கூடியதும் சிறு சிறு குழுக்களாகவேதான். கிறிஸ்துவில் வளரவும், அவருக்குச் சாட்சி பகரவும், ஒருவரையொருவர் தேற்றி ஆறுதல் கூறவும், ஆதிகாலக் கிறிஸ்தவர்கள் குடும்ப சூழலை மையமாக வைத்துச் சிறு குழுக்களாகவே கூடினர். ஆலயத்திலும் கூடினர், வீடுகளிலும் கூடினர். புதிய ஏற்பாட்டிலே இதற்குத் திருத்தூதர்பணி பின்வருமாறு சாட்சிபகர்கின்றது.

ஒவ்வொருநாளும் அவர்கள் ஒரே மனத்தோடு கோவிலில் தவறாது கூடிவந்தார்கள்; பேருவகையோடும் எளிய உள்ளத்தோடும் வீடுகள்தோறும் அப்பத்தைப்பிட்டு உணவைப் பகிர்ந்து உண்டு வந்தார்கள். தி. ப. 2:46.

அவர்கள் நாள்தோறும் கோவிலிலும் வீடுகளிலும் தொடர்ந்து கற்பித்து இயேசுக்கிறிஸ்துவைப்பற்றிய நற்செய்தியை அறிவித்து வந்தார்கள். தி. ப. 5:42.

இவ்வாறு அன்றைய கிறிஸ்தவ சமூகம் தினமும் செபிக்க ஆலயம் சென்றது. போதனைப் பணியின் மையமும் படிப்பினைச் செயலின் மையமும் இக்கிறிஸ்தவ சமூகமாகவே இருந்தது. ஆனால் ஆரம்பமுதல் கிறிஸ்தவ சமூகம் தனது செயற்பாடுகளை இரு தொகுதிகளாகச் செய்ததை நாம் காணமுடிகின்றது. ஒரு தொகுதி ஆலயத்திலும் இன்னுமொரு தொகுதி வீடுகளை மையமாகக் கொண்டும் நடைபெற்றன. சொற்ப காலத்தில் தனியார் வீடுகள் பல இடங்களிலும் வழிபாடுகளின் மையங்களாகவும் கிறிஸ்தவ அன்புப் பரிமாற்றங்களின் இருப்பிடங்களாகவும், கிறிஸ்தவ மறைக்கல்வி, மறை பரப்புச் செயல்களின் இடங்களாகவும் மாறிக்கொண்டு வந்தன. இவ்வாறு வீடுகள் செப வழிபாட்டுக் கூட்டங்களுக்குப் பாவிக்கப்பட்டதாக லூக்கா கூறுகிறார். உதாரணமாகப் புனித திருத்தூதரான பேதுரு சிறையில் அடைக்கப்பட்டபோது அவரின் விடுதலைக்காக முழுத்திருச்சபையுமே மன்றாடிக்கொண்டிருந்தது. அவர்களில் ஒரு தொகுதியினர் மாற்குவின் தாயாரான மரியாவின் வீட்டில் செபித்த வண்ணமாய் இருந்தார்கள். அவ்வேளைதான் பேதுருவானவர் வானதூதரால் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு நகர வாயிலுக்குக் கூட்டிவரப்பட்டார். பேதுரு தான் அற்புத விதமாக விடுவிக்கப்பட்டதை உணர்ந்தும் நேரே மாற்குவின் தாயார் மரியாவின் இல்லம் சென்று கதவைத்தட்டினார்.

பேதுரு தன்னுணர்வு பெற்றபோது, ஏரோதின் கையிலிருந்து என்னை விடுவித்து யூதமக்கள் எதிர்பார்த்த எதுவும் நிகழாதவாறு என்னைக் காத்தார் என்று நான் உண்மையாகவே அறிந்துகொண்டேன் என்றார். அவர் யாவற்றையும் புரிந்து கொண்டவராய் மாற்கு எனப்படும் யோவானின் தாயாகிய மரியாவின் வீட்டுக்குப் போனார். அங்கே பலர் ஒருங்கிணைந்து இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தனர். தி. ப. 12:12.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு அன்று வீடுகளே கிறிஸ்தவ ஒன்றிப்பினதும் ஒன்று கூடலினதும் இருப்பிடங்களாயிருந்தன. அத்துடன் வீடுகளிலேயே இரவு முழுவதும் விழித்திருந்து செபிப்பதும் விசுவாசப் போதனைகள் செய்வதும் நிகழ்ந்தன.

வாரத்தின் முதலாம்நாள் அப்பம் பிடுவதற்காக நாங்கள் ஒன்று கூடியிருந்தோம். மறுநாள் பவுல் புறப்படவேண்டியிருந்ததால் நள்ளிரவுவரை அவர் மக்களோடு தொடர்ந்து பேசிக்கொண்டேயிருந்தார். தி. ப. 20:7.

இதேபோன்றே பிலிப்பி நகரில் சிறைக் காவலனின் வீடும் லிட்டியா என்னும் பெண்மணியின் வீடும், கொரிந்து நகரில் பிறிசில்லா ஆக்குவிலா எனும் தம்பதியரின் வீடும், செசாரியா நகரிலே கொர்நேலியு என்பவரின் வீடும் இருந்தன. இவ்வாறு வீடுகளை மையமாகக் கொண்டிருந்த திருச்சபையிலே நற்செய்திப் போதனையின் பயனாக மக்கள் மத்தியிலிருந்த சாதி, இன, மொழி, வகுப்பு வேற்றுமைகளெல்லாம் தகர்க்கப்பட்டு, மக்கள் சிறு சிறு அன்பியங்களாக மாறினர். இதனால் தலைவனும் வேலையாளும், அடிமையும் உரிமையாளனும், வறியோரும் செல்வந்தர்களும் கணவனும் மனைவியும், யூதர்களும் கிரேக்கர்களும், பெற்றோரும் பிள்ளைகளும், இயேசுக்கிறிஸ்துவில் ஒன்றாக இணைந்தனர்.

கிறிஸ்து இயேசுவின்மீது கொண்டுள்ள நம்பிக்கையால் நீங்கள் அனைவரும் கடவுளின் மக்களாய் இருக்கிறீர்கள். இனி உங்களிடையே யூதர் என்றும் கிரேக்கர் என்றும் அடிமைகள் என்றும் உரிமைக் குடிமக்கள் என்றும் இல்லை; ஆண் என்றும் பெண் என்றும் வேறுபாடு இல்லை: கிறிஸ்து இயேசுவோடு இணைந்துள்ள நீங்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறீர்கள். கலாத். 3:26-28.

இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட ஒற்றுமை நிறைந்த கூட்டமைப்பே, இன்று நாம் கூறும் அன்பியங்களாக, அன்று ஆதித்திருச்சபையில் மிளிர்ந்தன. இக்குழுக்கள் கிறிஸ்துவைப் போதிப்பதையும், அவருக்குச் சாட்சிபகர்வதையும், குடும்ப உணர்வுடன் கடவுளை வழிபடுவதையும், இறையறிவில் ஆழமாவதையும் தமது குறிக்கோள்களாகக் கொண்டிருந்தன.

இன்று ஆசிய திருச்சபை ஆயர்களின் பரந்துரைரிளுக்கேற்ப முன்னெடுத்துச் செல்லப்படும் அன்பியங்கள் என்றழைக்கப்படுகின்ற சிறு கிறிஸ்தவக் குழுமங்களும் இதே குறிக்கோள்களைக் கொண்டனவாகவே இருக்கின்றன. இவற்றின் அடிப்படை நோக்கங்களை ஆராயுமிடத்து, நாம் பின்வருவனவற்றைக் காணமுடிகின்றது.

1. இறைவனை வழிபடுதலும் கிறிஸ்துவுக்குப் பணிந்து வாழ்தலும்.
2. இறைவார்த்தையின் அதிகாரத்தின் கீழ் வாழுதல்.
3. நம்பிக்கையின் அடையாளங்களாய் மற்றவர்களுக்குத் திகழுதல்.
4. பரஸ்பர சகோதர உறவை வளர்த்தல்
5. மக்களைக் கிறிஸ்து இயேசுவில் நம்பிக்கை கொள்ளச் செய்தல்.
6. ஒருவருக்கொருவர் பணிபுரிதல்.
7. உலகில், உலகிற்குப் பணிபுரிய ஒருவரொருவரைத் தயாரித்தல்.

14ம் பக்கத் தொடர்ச்சி ... ... ...

## சர்வ சமய சமத்துவ விழா

மட்டக்களப்பு கலை பண்பாட்டுக் களரியினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சர்வ சமய சமத்துவ விழா மேற்படிக் களரியின் புரவலர் தவத்திரு. போல் சற்குணநாயகம் அடிகளார் தலைமையில் இவ்வாண்டு மார்கழிமாத நடுப்பகுதியில் மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது

இவ்விழாவில் வாகரைவாணனால் எழுதப்பட்ட 'மட்டக்களப்புக் காவியம்' எனும் இலக்கியப் பனுவலும் அவரால் தொகுக்கப்பட்ட அறிவியல் யுகத்தில் 'சமயம்' எனும் பெயர் கொண்ட ஆய்வுரைத் தொகுப்பும் வெளியிடப் படவுள்ளன.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த சில பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் அரங்கேறவிருப்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் வியாபாரம்

★ திருமூலன்

மீண்டும் 'சமாதான' (ம்) கோஷத்துடன் ஜனதிபதி தேர்தலுக்கான வியாபாரம் களைகட்ட ஆரம்பித்துவிட்டது.

இன்றைய அரசியல்வாதிகளுக்குக் கடைவிரிக்க சமாதானத்தைவிட வேறு 'கிராக்கி'யான பொருள் ஏது?

இந்நாட்டில் சமாதானம் சவக்காலைகளில்கூட இல்லை.

இந்த ஜனாதிபதியின் காலம் முழுவதும் புதை குழிகளைத் தோண்டுவதே வேலையாகிவிட்டது.

சூரியகந்தையோடு ஆரம்பித்த ஜனாதிபதியின் பதவிக்காலம் செம்மணியோடு முடிந்திருக்கிறது.

எலும்புகளுக்குக்கூட இங்கே இளைப்பாற இடமில்லை.

இயற்கை இறப்புகளல்லவே, எப்படி இளைப்பாறும்!

பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தைக் கொண்டுவருவேன் என்ற உறுதிமொழியோடு பதவிக்கு வந்த ஜனாதிபதி அவர்கள் சமாதானத்துக்காக யுத்தம் நடத்தி தனது 'உறுதிமொழி'யைக் காப்பாற்றிக்கொண்டார்!?

எதிர்க்கட்சி ஒத்துழைக்காவிட்டாலும் தீர்வுப் பொதியை நிறைவேற்றுவேன் என்றார், தீர்வுப்பொதி தேய்வுப் பொதியானது.

சமவாய்ப்புச் சட்டம் என்ற பெயரால் ஒரு சமாளிப்பை நடத்தப்பார்த்தார், அதையும் சிங்களப் பேரினவாதம் விழுங்கிவிட்டது.

இப்போது இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் பதவியில் இருக்க விரும்பவில்லை. தேர்தலில் போட்டியிட்டு பதவிக்கு வந்து ஒரு வருடத்தில் 'தீர்ப்பேன்' என்கிறார்.

இந்த வேளையில் இனப்பிரச்சினையைத் தீர்த்து சமாதானத்தை நிலைநாட்ட பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி நடத்திய ஜயசிக்குறு, பலவேகய, ரணகோஷ, எல்லாம் நினைவில் வந்து தொலைக்கிறது.

'தீர்ப்பேன்' என்ற சொல்லுக்கு கடந்த கால அனுபவங்களிலிருந்து ஒரே ஒரு அர்த்தத்தைத்தான் நம்மால் புரிந்துகொள்ள முடியும். ஆயுதங்கள் மூலமாக அனை (வரையும்)த்யும் தீர்த்துவிடுவேன் என்பதுதான் அது.

'யுத்தத்தை நிறுத்துவது இனப்பிரச்சினைக்குத் தீர்வாகாது' என்ற அமைச்சர் கதிர்காமரின் 'பொன்மொழியையும்' நாம் இங்கே நினைவில் கொள்ளல் வேண்டும்.

ஒவ்வொரு முறையும் மாறி மாறி பதவிக்கு வரும் அரசாங்கங்கள் ஏட்டிக்குப் போட்டியாக தமிழ் மக்களைக் கொடூரமாகச் சித்திரவதைப்படுத்தி சின்னாபின்னமாக்கியதுதான் வரலாறு.

அதற்கு நம்மிடமுள்ள 'சிலது'களும் கை தூக்குவதுதான் பெருங்கொடுமை.

எப்படியோ மக்கள் எல்லாம் மகா மறதிக்காரர்கள் என்ற நினைப்போடு அனைவரும் சேர்ந்து (தேர்தல்) வியாபாரத்துக்குக் கடை விரித்துவிட்டார்கள்.

கடை விரிப்பவர்களை நம்மால் தடுக்க முடியாது. ஆனால் கொடுப்பதும் வாங்குவதும் எமது உரிமை. எதைக் கொடுக்கப்போகிறோம் எதை வாங்கப்போகிறோம் என்பதை நாம் சிந்தித்துத் தெளிந்துகொள்ளவேண்டும்.

உலகில் ஜனநாயகம் என்பது ஏகாதிபத்தியத்தின் கருவியாக இருப்பதுபோல் நமது நாட்டில் ஏகாதிபத்திய பேரினவாதத்தின் கருவியாக உள்ளது.

நாம் ஜனநாயக உணர்வோடு அளிக்கும் வாக்குகள் பேரினவாதத் தலைமையை கதிரையில் அமர்த்தவே உதவும்.

நாம் வாக்களிக்காவிட்டாலும் அதைத் தடுக்கமுடியாது.

நாம் செய்யக்கூடியது ஒன்றுதான். வாக்குச்சீட்டை போராட்டத்தின் கருவியாக மாற்றலாம். எமது எதிர்ப்பை, வெறுப்பை ஏமாற்றத்தை, ஒற்றுமையை உலகுக்குக் காட்டலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணம்
# சந்திக்க வேண்டிய அதேவேளை சிந்திக்க வேண்டிய ஒரு யதார்த்தம்

★ நேசன் அடிகள்

நவம்பர் மாதம் நீத்தாரை நினைக்கும் மாதம்; நம் நெஞ்சமெல்லாம் நெக்குருகி நிற்கும் மாதம். நம் அணுவின் அணுவாய் ஆவியின் ஆவியாய் வாழ்ந்து, நமது உறவுகளையும் உணர்வுகளையும் உள்ளன்போடு பகிர்ந்து கொண்ட பலர் இன்று நம்மோடு இல்லை. நவம்பர் இரண்டாம் திகதி கத்தோலிக்கரின் கல்லறைகள் எல்லாம் காவியம் பாடும் ஓவியங்களாகக் காட்சிதரும். கல்லறைகள் கண்ணீரால் கழுவப்படும். கல்லறை நமக்குக் கடைசி அல்ல. கடந்த கால மனிதர்களுக்காக நாம் கதறவேண்டியவர்கள் அல்ல. விசுவாசமுள்ள நாம் நிகழ்காலத்தின் நிஜங்கள். எதிர்காலத்தை எதிர்நோக்குபவர்கள். ஒரு கிறிஸ்தவன் புதைக்கப்படுவதில்லை, அவன் விதைக்கப்படுகிறான். ஒரு கிறிஸ்தவனின் அடக்கம் என்பது புதிய வாழ்வின் தொடக்கம்,

## மரணம் இயற்கையின் விதி – இறைவனின் நியதி

''நாம் எல்லோரும் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டவர்கள்தான். ஆனால் தூக்கில் இடும் தினம்தான் வித்தியாசம்'' என்றார் டால்ஸ்டாய் என்ற அறிஞர். சாவு என்பது நாம் அனைவருமே சந்திக்க வேண்டிய அதே வேளை சிந்திக்க வேண்டிய ஒரு யதார்த்தம். சாவைப்பற்றிச் சிந்திக்க சாதாரண மனிதன் தயங்குகிறான், கலங்குகிறான். பிறந்தவன் என்றோ ஒரு நாள் இறந்தே ஆகவேண்டும் என்பது இயற்கையின் விதி. இறைவனின் நியதி.

''மரணம்!
நாம் பெற்றுக்கொண்டதல்ல.
பிறக்கும் போதே இருப்பது,
வாழும்போது தொடர்வது,
நேரம் வரும்போது நிகழ்வது'' என்கிறார் இக்காலக் கவிஞர் ஒருவர்.

''கனவு காணும் வாழ்க்கை யாவும்
கலைந்து போகும் கோலங்கள்.

பிறக்கின்ற போதே இறக்கின்ற சேதி
இருக்கின்ற தென்பது மெய்தானே
உடம்புகள் என்பது
உண்மையில் என்ன
கனவுகள் வாங்கும் பைதானே'' என்று பாடுகின்றார் கவிஞர் கண்ணதாசன்.


## வாழ்க்கையின் நிலையாமை

வாழ்க்கையின் நிலையாமையைப்பற்றி சொல்ல வந்த நம் முன்னோர்கள் ''காயமே இது பொய்யடா வெறும் காற்றடைத்த பையடா'' என்றும், ''வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்'' என்றெல்லாம் கூறிச் சென்றுள்ளார்கள். ஏன் இக்கால கவிஞன்கூட ''மண்ணின்மீது மனிதனுக்காசை மனிதன்மீது மண்ணுக்காசை மண்தான் இறுதியில் ஜெயிக்கிறது'' என வாழ்வின் நிலையாமையை உணர்ந்து உரைத்திருக்கிறான். ஆறிலும் சாவு நூறிலும் சாவு என்பார்கள். சாவு - அது சிலருக்கு வேதனை சிலருக்கு விடுதலை. சிலருக்கு வேடிக்கை சிலருக்கு வாடிக்கை. சிலருக்கு முடிவு சிலருக்கு விடிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சபைச் செய்திகள்



## நாம் பேறுபெற்றோர்

★ ஆண்டவரின் திருவிருந்துக்கு அழைக்கப்பட்டோர் பேறுபெற்றோர் என்று குருவானவர் திருப்பலியில் கூறும் வேளை உலக மீட்புக்காகத் தயாரிக்கப்பட்டுள்ள நித்திய திருவிருந்தில் பங்கு கொள்ள அழைக்கப்பட்டுள்ள நாம் உண்மையிலேயே பேறுபெற்றோர் என திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் கூறினார்.

ஒக்டோபர் பத்தாம் திகதி ஞாயிறு காலை இத்தாலியில் சியன்னாவில் உள்ள புனித கத்தரினாள் ஆலயத்தில் மறையுரை வழங்கிய திருத்தந்தை, சியன்னா மறைமாவட்டத்தின் பாதுகாவலியான புனித கத்தரினாள் இங்குள்ள மக்களின் வாழ்வில் மறை உண்மைகளைப் போதித்து ஒரு முழுமையான சாட்சியத்தை வழங்கியிருக்கின்றார் என்றார்.

திருமணவிருந்து உவமையை விளக்கிக் கூறிய திருத்தந்தை, பங்குமக்கள் தங்கள் பணித்தலம், கல்வி நிலையம் போன்ற இடங்களிலும் பொதுவாழ்விலும் பிறருக்கு நற்செய்தியை அறிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். கிறீஸ்து தூய்மையாய் இருப்பதுபோல இளைஞர்களும் தூய்மையாயிருக்கப் பேராவல் கொள்ளுமாறும் புனித சியென்னா கத்தரினாவைப் பின்பற்றுமாறும் கேட்டுக்கொண்டார்.

## இஸ்ராயேலுக்கு விண்ணப்பம்

★ இரண்டாயிரமாம் ஆண்டு நெருங்கிவரும் இவ்வேளையில் திருப்பயணிகள் கிறீஸ்தவத் தலங்களைத் தரிசிப்பதற்கான தடைகளை இஸ்ராயேல் தளர்த்தவேண்டுமென புனித பூமியின் தலத் திருச்சபை இஸ்ராயேலை விண்ணப்பித்துள்ளது.

புனித தலங்களைத் தரிசிக்கத் தடையாக இருப்பவை அனைத்தும் அகற்றப்பட வேண்டுமென இலத்தீன் ரீதிப் பிதாப்பிதா மிஸே சாபா தன் அறிக்கையில் விண்ணப்பித்துள்ளார். இயேசுவின் வாழ்வோடு தொடர்புடைய இடங்களைத் தரிசிக்க வரும் திருப்பயணிகள் பல்வேறு பாதுகாப்பு சூழ்நிலைகளுக்கு உட்படுத்தப்பட்டு அவமானப்படுத்தப்படுகின்றார்கள் என பலர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்ததைத் தொடர்ந்து பேராயர் சாபா இவ்விண்ணப்பத்தை இஸ்ராயேல் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

## அழிவுக்குள்ளாகும் ஒழுக்கநெறிகள்

★ கருக்கலைத்தல், மணமுறிவு மற்றும் ஒரே பாலினத் திருமணங்களை அனுமதிப்பதற்கான பரிந்துரைகள் பிலிப்பைன்ஸ் காங்கிரஸ் அவையில் முன்வைக்கப்பட்டுள்ளது, அந்நாட்டு ஒழுக்க நெறிகளுக்கெதிரான தாக்குதல், என கவலையை வெளியிட்டுள்ளார் கர்தினால் ஹைசிந்சின்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி வாய்ந்தவர்கள், மற்றும் பணக்காரர்களாலேயே இப்பரிந்துரைகள் முன் வைக்கப்பட்டுள்ளதாக குற்றசஞ்சாட்டும் கர்தினால் சின், இத்தகைய அனுமதிகள்மூலம் ஒரு குழந்தை தாயின்றி இரு தந்தைகளால் வளர்க்கப்படுதல், ஒரு தாய்க்குப் பல கணவர் மூலம் பல குழந்தைகள் பிறப்பது போன்ற நிலை உருவானால் சமூகம் என்னவாகும்? என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளார்.

தற்போது பிலிப்பைன்ஸ் காங்கிரஸ் அவையில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகள் நிறைவேற்றப்பட்டால் குடும்பங்கள் அழிவுக்குள்ளாகும் என்ற எச்சரிக்கையையும் விடுத்துள்ளார் அவர்.

## ஐரோப்பாவுக்கான புதிய நற்செய்தி!

★ ஒக்டோபர் முதல்தேதி முதல் வத்திக்கானில் இடம்பெறும் சிறப்பு ஆயர் மாநாட்டில் முதற்கட்ட உரைத் தொகுப்பை 14வது பொது அவைக் கூட்டத்தில் வெளியிட்டார், கர்தினால் அந்தோனியோ மரியோ றுவாக்கோ அடிகளார்.

இன்று ஐரோப்பாவுக்கு அவசியமாகத் தேவைப்படும் நம்பிக்கையும் ஆதாரமுமான கிறிஸ்துவின் உயிர்த்துடிப்பான பிரசன்னத்துக்கு சாட்சியாக இருந்து அதனை அறிவிப்பது, ஐரோப்பாவுக்கான புதிய நற்செய்தியை அறிவித்தல், மனமாற்றத்துக்கு வழிவகுத்தல் அதன்வழி ஐரோப்பியக் கண்டத்தின் நற்செய்தி அறிவித்தலுக்குத் திட்டமிடுதல் என்பவை குறித்து இதுவரை நடந்த அமர்வுகளில் விவாதிக்கப்பட்டதாகக் கூறினார் கர்தினால்.

## ஒன்றுகூட வேண்டும்

★ திருச்சபையில் பிரச்சினைகளை ஏற்படுத்திவரும் திருச்சபைக் கோட்பாடு மற்றும் ஒழுங்குபற்றிய முடிச்சுகளை அகற்ற வேண்டுமாயின் அனைத்துலக கத்தோலிக்க ஆயர்களும் ஒன்றுகூட வேண்டுமென்று மிலான் கர்தினால் கார்லோமனியா மார்ட்டினி கூறினார்.

திருப்பீடத்தில் இடம்பெற்ற ஐரோப்பிய கத்தோலிக்க ஆயர் பேரவையில் உரையாடிய கர்தினால் மார்ட்டின் குருக்கள் பற்றாக்குறை, திருச்சபையிலும் சமுதாயத்திலும் பெண்களின் பங்கு, திருச்சபையில் பொது நிலையினரின் பங்கு, மணமுறிவு உள்ளிட்ட திருமண ஒழுங்கு, ஆர்த்தடாக்ஸ் திருச்சபையுடனான உறவு, ஒழுக்க மதிப்பீடுகள், மற்றும் சட்டங்களுக்கிடையிலான உறவு போன்றவை இன்றைய பிரச்சினைகள் என்றார் கர்தினால் மார்ட்டின்.

## ஐ. நா. உடன்பாடு

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கான ஆயத்த பொறுப்பாண்மைக்குழு தனது அமர்வை முடித்துக்கொண்டபோது பாவசங்கீர்த்தனம் செய்பவருக்கும் குருவுக்கும் இடையிலுள்ள அந்தரங்கத்தை காப்பாற்றுதலை தனது விதிகளில் சேர்த்துக்கொண்டது.

வைத்தியருக்கும் வழக்கறிஞருக்கும் அவர்களது சேவை பெறுவோரிடமிருக்கும் அந்தரங்களைப் பற்றிக் கூறும் பகுதியில் குருக்களையும் சேர்க்குமாறு வத்திக்கான் கேட்டதற்கமைய இவ்வாறு சேர்க்கப்பட்டுள்ளது.

அத்துடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும் தமது கடமையின்போது அறியவரும் தகவல்கள் குறித்து சாட்சியமளிப்பதில் விலக்குரிமை அளிக்கப்பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17ம் பக்க தொடர்

## சாவு என்னும் மறைபொருள்

நாம் எப்போது எப்படிப் பிறப்போம் என்றும் தெரியாது. எங்கே எப்படிச் சாவோம் என்றும் தெரியாது. கத்தோலிக்க திருச்சபையின் அதிகாரபூர்வமான கொள்கைகள் அடங்கிய இரண்டாம் வத்திக்கான் சங்க ஏட்டில் ''சாவு என்னும் மறைபொருள்'' பற்றிச் சுருக்கமாக அதேவேளை தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. ''சாவின் முன்னிலையில் மனித நிலையின் புதிர் மிகவும் புரியாததாகின்றது. வேதனையும் படிப்படியாக வருகின்ற உடல் சிதைவும் மட்டுமல்ல மனிதனை நோகப்பண்ணுபவை; மாறாக, அவைகளை விடவும் அதிகமாக, நிரந்தரமாக அழிந்து விடுவோம் என்ற அச்சம் மனிதனை வதைக்கின்றது. தன் ஆளுமை நிலை முழுமையாக அழிந்துவிடும் என்ற கருத்தையும் அது மீளுகையின்றி மாய்ந்துபோய்விடும் என்ற கருத்தையும் அவன் வெறுத்துத் தள்ளுவது சரியே: இவ்வாறு செய்யும்போது தன்னுடைய இதய உணர்வின் அடிப்படையிலேயே அவன் சரியாகத் தீர்ப்பிடுகின்றான். மனிதன் தன்னுள் கொண்டுள்ள நித்தியத்தின் வித்து வெறும் பருப்பொருள் நிலைக்கு ஒடுக்கப்பட முடியாததால் அது சாவை எதிர்த்து எழுகின்றது. தொழில் நுட்பத்துறையின் சாதனைகள் எவற்றாலும், அவை வெகு பயனுடையவையாயிருப்பினும்கூட, மனிதனின் கவலையைத் தணிக்க இயலாது: ஏனெனில் உடல்சார்ந்த உயிரை நெடுங்காலம் நீடிக்கச் செய்தாலும் கூட அதன்பின் வரும் வாழ்விற்காக மனிதனின் இதயத்தில் மாய்த்திட முடியாத விதத்தில் உறைந்திருக்கும் தாகத்தை அதனால் தணிக்க முடியாது'' (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு. இன்றைய உலகில் திருச்சபை, எண் 18)

## மரணம் என்னும் சிறந்த ஆசான்

மரணம் பற்றிய சிந்தனை மனிதனாக்குகிறது. மரணம் பற்றிய சிந்தனை மனிதனுக்கு ஞானத்தை வழங்குகிறது. கவிஞர் கண்ணதாசன் பாடிவைத்தார் ''ஒவ்வொரு மனிதனும் இறக்கிறான், அவன் இருப்பவன் கண்ணைத் திறக்கிறான்'' என்று. ஓர் அரசன் தன் அரண்மனையில் இரண்டு சேவகர்களை ஓர் பணிக்காக நியமித்திருந்தான். ஒவ்வொரு நாள் காலையிலும் ''அரசே நீர் ஒரு அரசன்; ஆயினும் நீரும் ஒருநாள் சாகவேண்டும்'' என்று அரசனுக்கு அவனது மரணத்தைப் பற்றி ஞாபகப்படுத்துவதே அச்சேவகர்களது பணியாக இருந்தது. காரணம் மரணம் பற்றிய சிந்தனை மனிதனை நன்நெறியில் நடத்துகின்றது. மரணம் பற்றிய எண்ணம் அவனை பாவத்தை விலக்கி புண்ணியத்தை செய்ய தூண்டுகின்றது.

## திருச்சபையின் போதனை

மரணம் என்பது சாதாரண மனிதக் கண்ணோட்டத்தில் புரியாத புதிராக இருந்தாலும் இறைநம்பிக்கை உள்ளவர்களுக்கு அது புதிராக இல்லை. இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடானது மரணம் பற்றியும் மரணத்திற்கு அப்பால் உள்ள வாழ்வு பற்றியும் பேசுகிறது. ''சாவு எவ்வித கற்பனைக்கும் எட்டாத விதத்தில் உள்ளது. ஆயினும் இவ்வுலக அவநிலையின் எல்லைகளுக்கு அப்பால் ஒரு பேரின்ப முடிவிற்காக மனிதனைக் கடவுள் படைத்துள்ளார் என்று திருச்சபை இறைவெளிப்பாட்டின் போதனையால் உறுதியோடு கூறுகின்றது. மனிதன் பாவம் செய்யாமல் இருந்திருப்பின், உடல்சார்ந்த சாவினின்று விடுவிக்கப்பெற்றிருப்பான். தான் செய்த பாவத்தால் அவன் மீட்பை இழந்தான்; இந்த மீட்பை எல்லாம் வல்ல இரக்கம் நிறைந்த மீட்பர் மனிதனுக்கு மீண்டும் அளிக்கும்போது உடல்சார்ந்த சாவும் தோற்கடிக்கப்படும். இது கிறிஸ்தவ விசுவாசப் போதனை. ஏனெனில், மனிதன் அழிவில்லா இறைவாழ்வில் முடிவின்றி ஒன்றித்துத் தன் முழு இயல்போடு கடவுளுடன் இணைய வேண்டுமென்று அவர் அவனை அழைத்துள்ளார், அழைத்துக்கொண்டுமிருக்கிறார். கிறிஸ்து தம்முடைய சாவினால் மனிதனைச் சாவினின்று மீட்டு வாழ்வுக்கு உயிர்த்தெழுந்ததால் இந்த வெற்றியை நிலைநாட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு, சிந்திக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது வருங்காலத்தைப்பற்றிய கவலைகளுக்கு உறுதியான விளக்கச் சான்றுகளுடன் விடைபகர்கின்றது விசுவாசம். அதே நேரத்தில் சாவினால் ஏற்கனவே பிரிக்கப்பட்ட அன்புச் சகோதரரோடு கிறிஸ்துவில் ஒன்றிக்க இந்த விசுவாசம் ஆற்றல் தருகின்றது. அவர்கள் கடவுளோடு உண்மை வாழ்வைப் பெற்றுவிட்டார்கள் என்ற நம்பிக்கையும் அளிக்கின்றது. (இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு. இன்றைய உலகில் திருச்சபை, எண் 18)

## இறைவார்த்தை தரும் ஆறுதல்

சாவைப்பற்றியும் சாவுக்குப் பின் வரும் வாழ்வைக்குறித்தும் விவிலியம் தெளிவாகப் பேசுகின்றது. ''சகோதரர்களே, இறந்தோரைப்பற்றி உங்களுக்கு ஐயமிருக்கலாகாது. நம்பிக்கையற்ற ஏனையோரைப்போல் நீங்களும் வருந்தலாகாது. யேசு இறந்தபின் உயிர்த்தெழுந்தார் என்று நாம் விசுவசிக்கின்றோம் அல்லவா? அப்படியானால், யேசுவின் ஒன்றிப்பில் இறந்தோரைக் கடவுள் அவருடன் அழைத்து வருவார். அதன் பின்னரே உயிரோடு எஞ்சி நிற்கும் நாம் அவர்களோடுகூட ஒன்றாய் மேகங்கள் மீது தூக்கிச் செல்லப்பட்டு, வான்வெளியில் ஆண்டவரை எதிர்கொள்ளப் போவோம். போய், ஆண்டவரோடு எப்போதும் இருப்போம். எனவே, இக்கருத்துக்களைக்கொண்டு ஒருவரை ஒருவர் தேற்றிக்கொள்ளுங்கள்.''
(தெசலோனிக். 4:13-14, 17b-18)

''அழிவுக்குரிய இவ்வுடல் அழியாமையையும், சாவுக்குரிய இவ்வுடல் சாகாமையையும் அணிந்துகொள்ளும்பொழுது, எழுதியுள்ள இவ்வாக்கு நிறைவேறும். சாவு வீழ்ந்தது, வெற்றி கிடைத்தது. சாவே, உன் வெற்றி எங்கே? சாவே, உன் கொடுக்கு எங்கே?'' (1 கொரி. 15:54-55) இதுபோன்று பல இடங்களில் மனிதருக்கு நம்பிக்கை தரும் ஆறுதல் தரும் வார்த்தைகள் பல விவிலியத்தில் விரவிக்கிடக்கின்றன.

## நாம் மரணத்தை எப்படி எதிர்கொள்ளப் போகின்றோம்?

சாவைச் சந்திக்கும்போதாவது சாதாரண மனிதன் வாழ்வைப்பற்றிச் சிந்திக்கிறான்.

''மண்ணுக்குத் திரும்புவது மனிதனின்
மாண்பு அல்ல
மண்ணையே விண்ணாகத் திருப்புவதே
மனிதனின் மாண்பு''

''உயிர்த்தெழுதல் இல்லையெனில் 'உண்போம் குடிப்போம் நாளைக்குச் சாவோம்' என்றிருக்கலாமே! நீங்கள் ஏமாந்து போக வேண்டாம்'' (1 கொரி. 15:32) என்று எச்சரிக்கிறார் புனித சின்னப்பர். பாவத்தின் விளைவுதான் சாவு எனில் பாவமில்லாதவன் சாவுக்கு அஞ்சவேண்டியதில்லை. கிறிஸ்துவிடம் தோல்வி கண்ட சாவு அவரைப் பின்பற்றுகின்றவர்களிடம் வெற்றி பெற்றுவிடக்கூடாது. வாழ்கின்ற ஒவ்வொரு வினாடியும் வாழ்வின் நோக்கம் நிறைவேற்றப்படல் வேண்டும். சாவுக்குப் பிறகும் நிலைத்திருக்கும் செல்வங்களை சேகரிக்கும் முயற்சியில் இறங்க வேண்டும்.

### பார்க்கமுடியாத மில்லேனியத்தின் பிறப்பு

புதிய மில்லேனியத்தின் பிறப்பைக் கொண்டாடுவதை உலகில் எல்லோரும் பார்க்க முடியும். பார்வை இல்லாதவர்களைத் தவிர .....! அதற்காக அவுஸ்திரேலியாவில் உள்ள சிட்னி நகரில் பார்வையற்றோர் புதிய மில்லேனியத்தின் பிறப்பை தொட்டு, முகர்ந்து, உணர்ந்து, புரிந்து கொள்வதற்கான பொருட்காட்சி ஒக்டோபர் 5ம் திகதி நடத்தப்பட்டது. 65 வகைப் படைப்புக்கள் அங்கு வைக்கப்பட்டிருந்தன சிறந்த படைப்புக்குப் பரிசும் தரப்பட்டது. நடுவர்களாக நான்கு பார்வையற்றவர்களும், மூன்று பார்வையுள்ளவர்களும் பங்கு பற்றியது ஒரு புதுமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்சிப்பாய்



அலையெறியும் ஆழ்கடலை அமைதியாக்கி
அன்பான சீடருக்கு அபயந்தந்தாய்!
விலைமகளைக் கல்வீசி வீழ்த்திடாமல்
விரைந்திழிஞர் விட்டகன்று போகச்செய்தாய்
குலமாந்தர் கூற்றானான் லேகியோனை
குன்றிடையே பன்றிகளுட் போகச்செய்தாய்
தலைமகனுக்குயிர்கொடுத்து நாயீன்கைம்பெண்
நிலையினுக்கு இரங்கியருள் நிரம்பச்செய்தாய்

பொல்லார்க்கும் புலையருக்கும் புதுவாழ்வீந்தாய்
புல்லருக்குப் புகலிடந்தந் தேற்றுக்கொண்டாய்
பொல்லாதாம் போதனைகள் புறம்பேதள்ளி
புண்ணியனே! விசுவாசம் பேணிக்காத்தாய்
வல்லாவி யின்கனிகள் வரமாய்த்தந்தாய்
வல்லமையாய் உன்நாமம் வாழச்செய்தாய்
எல்லார்க்கும் எல்லானே! இயேசையாவே!
இலங்கையிலே ஈனரெமை இரட்சிப்பாயே!

அன்பு தயை பொறை நிறைவு கொண்டோமில்லை
அயலவரை நேசிக்க விழைந்தோமில்லை
துன்புறுவார் தங்கள்துயர் துடைத்தோமில்லை
தூய்மைநெறி பிறழாமல் வாழ்ந்தோமில்லை
உன்புகழை உலகெங்கும் உரைத்தோமில்லை
உதவாத போதனைகள் தவிர்த்தோமில்லை
என்புருகி வேண்டுகிறோம் இயேசையாவே
எமக்கிரங்கி ஈனரெமை இரட்சிப்பாயே!

★ கே. ஜே. வேலுப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலிய பொது அறிவுப் போட்டி - 44

1. அவருடைய மனைவியர் அவர் இதயத்தை வேற்றுத் தெய்வங்களைப் பின்பற்றும் படி மாற்றிவிட்டனர். இவ்வசனம் யாரைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது? (காண்: 1 அரசர்)

.................................................................................................

2. 'அனைத்து மனிதரையும் ஒளிர்விக்கும் உண்மையான ஒளி' என்று இயேசுவை வர்ணித்த நற்செய்தியாளர் யார்?

.................................................................................................

3. 'கிறீஸ்துமீது நம்பிக்கைகொண்ட நிலையில் இறந்தவர்கள் முதலில் உயிர்த்தெழுவர்' இவ்வசனம் திருவிவிலியத்தில் எந்தப்புத்தகத்தில் எத்தனையாம் அதிகாரம் வசனங்களில் கூறப்பட்டுள்ளது? (காண்: திருமுகங்கள்)

.................................................................................................

4. கூர்ப்புக் கொள்கையின் தந்தை யார்?

.................................................................................................

5. அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச நீர்விநியோகத்திட்ட வேலைகளுக்கு உதவி வழங்கும் நாடு எது?

.................................................................................................

6. மனித உடலினுள் யூரியா உற்பத்தியாகும் உறுப்பு எது?

.................................................................................................

பெயர்.................................................................

முகவரி .................................................................

.................................................................

.................................... இங்கே வெட்டவும் ....................................

**போட்டி விதிகள்**

போட்டியில் ஆறு வினாக்களுக்கும் சரியான விடைகளை அளிப்போர் மத்தியிலிருந்து தெரிவு செய்யப்படும் ஒருவருக்கு ரூபா 100/- பரிசாக வழங்கப்படுவதோடு ஐந்து வினாக்களுக்கு, நான்கு வினாக்களுக்கு மூன்று வினாக்களுக்கு மட்டும் சரியான விடைகளை அளிப்பவர்களில் தெரிவு செய்யப்படும் ஒவ்வொருவருக்கும் முறையே 75/- 50/- 25/- ஆகிய பரிசுத் தொகைகள் வழங்கப்படும்.

போட்டியில் அனைவரும் பங்குபற்றலாம். ஆனால் தொண்டனில் வெளிவரும் கூப்பனில் அனுப்பப்படும் விடைகள் மட்டுமே போட்டிக்குச் சேர்த்துக் கொள்ளப்படும். ஒருவர் எத்தனை கூப்பனை வேண்டுமானாலும் அனுப்பலாம்.

விடைகளை அனுப்ப வேண்டிய இறுதி நாள்: 15-12-99

முகவரி: விவிலிய பொது அறிவுப் போட்டி - 44,

தொண்டன், அ. பெ. எண். 44, மட்டக்களப்பு. 30000.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவிலிய - பொது அறிவுப் போட்டி - 42 விடைகள்

1. 40 ஆண்டுகள் (1 அரசர் 11/44)
2. எருசலேம் (மத். 5/35)
3. புனித பவுல் (1 கொரி. 15/9)
4. ஆசியான்
5. செற்ஸ் பிளை (Tsetse Fly)
6. எய்லின் கொலின்ஸ்

**பரிசு பெறுவோர்:**

ரூபா 100/- — தெரிவாகவில்லை.

ரூபா 75/- — எ. விஜி
இல. 36, எல்லை வீதி வடக்கு,
மட்டக்களப்பு.

ரூபா 50/- — அஞ்சலின் சமியா ஜெயக்குமார்
9, மணி லேன்,
ஊறணி, மட்டக்களப்பு.

ரூபா 25/- — சி. ஆஞ்சலா மென்சி
57/2, மத்திய வீதி,
உவர்மலை, திருகோணமலை.

போட்டியிலே பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. இன்னும் பல வாசகர்களும் போட்டியில் பங்குகொள்ள வேண்டுமென அழைப்பு விடுக்கின்றோம். - இ. ஆ.

## எழுதிப் பாருங்கள்!



★ 'கிறிஸ்மஸ்' அனைவருக்கும் மகிழ்ச்சி தருகின்ற ஒரு விழா. ஆட்டம், பாட்டம், குதூகலம், கும்மாளத்துக்கு குறைவில்லை. அதுவும் இளையவர்கள் என்றால் கேட்கவா வேண்டும்! கிறிஸ்மஸ் தினத்தன்று உங்கள் வாழ்வில் இடம்பெற்ற மறக்க முடியாத ஒரு சம்பவத்தை சுருக்கமாக, சுவையாக எழுதி அனுப்புங்கள்.

★ முழுத்தாளில் ஒரு பக்கத்துக்கு மேற்படாது இருக்கவேண்டும்.

★ தகுதியானவை பிரசுரிக்கப்படுவதோடு தெரிவு செய்யப்படும் ஒரு சம்பவத்துக்கு பரிசும் வழங்கப்படும்.

★ அனுப்பவேண்டிய இறுதிநாள்: 30-11-99.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய உலகம்

## கவிதைப் போட்டி முடிவுகள்

புதிய உலகம் கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சி வெள்ளி விழா ஆண்டில் ஆயிரமாவது மலர் நிறைவதை முன்னிட்டு அனைத்திலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் பின் வருவோர் பரிசுகளைப் பெற்றுள்ளனர் என்பதை அறியத்தருகிறோம்.

**1ம் பரிசு**

*ஏ. எம். முகைதீன்*
(மூதூர் முகைதீன்)
நொக்ஸ் வீதி
மூதூர் - 05

**2ம் பரிசு**

*பெக்ஸ் ரவிச்சந்திரன்*
இல : 39: புனித அந்தோனியார் வீதி
மட்டக்களப்பு.

**3ம் பரிசு**

*முகமட்கான் தௌபீக்*
46A, றியால் சோமில் வீதி
மளிகைக்காடு - 01
காரைதீவு (கி.ம)

போட்டியிலே பங்குகொண்டு ஒத்துழைத்தவர்களுக்கும் தெரிவு செய்த நடுவர்களுக்கும் விளம்பர உதவிகள் புரிந்த பத்திரிகையாளர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைக் கூறிக்கொள்ளுகிறோம்.

**இணைப்பாளர்**
**கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகள் – தமிழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.

# காற்றில் கலந்துவரும்

## கேட்டுப்பாருங்கள்!

**இலங்கை வானொலி தேசிய சேவையில்**

**கத்தோலிக்க வானொலி நிகழ்ச்சிகள் - தமிழ், நவம்பர் - டிசம்பர் - 1999**

நாள் : 28
நேரம் : மாலை 7.00 மணி

**புதிய உலகம்**

~ மானிட வாழ்வில் மரணம்
(கலந்துரையாடல்)

நாள் : 30
நேரம் : மாலை 7.45 மணி

**சிறுவர் உலகம்**

~ விவிலியக் கதைகள்
சொல்பவர்: எஸ். ஜெயராஜா

நாள்: 4,5,6,7
நேரம் : காலை 5.50 மணி

**கத்தோலிக்க நற்சிந்தனை**

வழங்குபவர் அருள் சகோ. பிரைனர்

நாள் : 24,25,26
நேரம் : காலை 5.50 மணி

**கத்தோலிக்க நற்சிந்தனை**

வழங்குபவர் : எஸ்.பத்மநாதன் அவர்கள்

நாள் : 12
நேரம் : மாலை 7.00 மணி

**புதிய உலகம்**

~ சிந்தனை உரை
~ அறிவுச்சுரங்கம்
(திருமறைப் போட்டி)

நாள் : 14
நேரம் : மாலை 7.45 மணி

**- சிறுவர் உலகம்**

~ விவிலியக் கதைகள்
சொல்பவர் : எஸ்.ஜெயராஜா

நாள் : 18,19,20,21
நேரம் : காலை 5.50 மணி

**கத்தோலிக்க நற்சிந்தனை**

வழங்குபவர் : செல்லத்துரை ஜெயராஜா

நிகழ்ச்சித் தொகுப்பு : *மலர்வேந்தன்*
தொடர்பு: அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.

VANASINGE PRINTERS, BATTICALOA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org